தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
ஆணை எண்.215/பேரூ/2021

நாள் 23.11.2021

திரு. N. சந்திரசேகரன்,
கோடேரி, நீலகிரி மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
அதிகரட்டி பேரூராட்சி ... எதிர்மனுதாரர்

நீலகிரி மாவட்டம், கோடேரி கிராமத்தைச் சேர்ந்த திரு. N. சந்திரசேகரன் அவர்களின் 16.12.2019 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 18.12.2019ல் பெறப்பட்டு 215/2019 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

நீலகிரி மாவட்டம், கோடேரி கிராமம் மற்றும் அஞ்சல் என்ற முகவரியில் வசிக்கும் திரு. N. சந்திரசேகரன் என்பவர் அதிகரட்டி பேரூராட்சிக்கு உட்பட்ட கோடேரியில் 9/44 மற்றும் 9/45 ஆகிய இரண்டு கதவு எண்கள் தனது தாயார் திருமதி. தேவியம்மாள் பெயரில் உள்ளதாகவும், அந்த கதவு எண்கள் உள்ள வீட்டிற்கு முறையாக வரிகளை செலுத்தி வந்துள்ளதாகவும், அந்த கதவு எண்களில் ஒன்றான 9/44ஐ தங்களை எந்தவிதமான விசாரணையும் செய்யாமலும், தங்களுக்குத் தெரிவிக்காமலும், தங்களிடம் தடையில்லாச் சான்று பெறாமலும், தனது மூத்த அண்ணன் திரு. ஜம்புலிங்கம் அவர்களுக்கு அதிகரட்டி பேரூராட்சியில் முறைகேடாக பெயர் மாற்றம் செய்து கொடுத்துள்ளார்கள் என்று குறிப்பிட்டுள்ளார். மேலும், தான் வரிகளை செலுத்த பேரூராட்சிக்கு சென்றபோதுதான் கதவு எண்.9/44 திரு. ஜம்புலிங்கம் என்பவருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக கூறினார்கள். ஜம்புலிங்கத்துடன் பிறந்த மற்ற சகோதரர்கள் இருவர் உள்ளது தெரிந்தும், எங்களிடம் எந்தவிதமான தடையில்லாச் சான்றும் பெறாமல் பணத்தை மட்டும்

பெற்றுக்கொண்டு, தங்களுக்குத் தெரியாமல் முறைகேடாக பெயர் மாற்றம் செய்துகொடுத்துள்ளார்கள் என்று தெரிவித்துள்ளார். மேலும், அதிகரட்டி பேரூராட்சி செயல் அலுவலர்கள் தன்னிச்சையாக செயல்படுவதில்லை என்றும், இங்கு பணியிலுள்ள சிவகணேஷ் மற்றும் மணிகண்டன் இவர்கள் தலைமையில்தான் இயக்கப்படுவது உண்மை என்றும், முறைகேடுகளுக்கு செயல் அலுவலர் இவர்களுக்கு உடந்தையாக செயல்பட்டு இவர்கள் சொல்படிதான் நடந்துகொள்கிறார்கள். இந்நிலையில், தம்மிடம் எந்தவிதமான ஆட்சேபனை கடிதமும் பெறாமல் திரு. ஜம்புலிங்கம் என்பவர் பெயரில் உள்ள கதவு எண்.9/44ஐ மீண்டும் திருமதி. தேவியம்மாள் பெயருக்கு மாற்றியுள்ளார்கள். இதில் முறைகேடு தெளிவாக தெரிகிறது என்றும், பெயர் மாற்றம் எந்த ஆண்டு செய்யப்பட்டு உள்ளதோ அன்றைய தேதியில் இருந்த செயல் அலுவலர் யார், செயல் அலுவலருக்கு உடந்தையாக பணியில் இருந்த திரு. சிவகணேஷ் மற்றும் மணிகண்டன் ஆகியோர் மீது உரிய விசாரணை மேற்கொண்டு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.மேலும், குடிநீர் இணைப்பும் திரு. ஜம்புலிங்கம் அவர்களுக்கு வழங்கியுள்ளதாகவும் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

2. மேற்கண்ட முறையீட்டு மனு தொடர்பாக அதிகரட்டி பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர் 03.08.2021 அன்று நேரடி விசாரணைக்கு அழைக்கப்பட்டனர்.

3. இதனிடையே, நீலகிரி மாவட்டம், அதிகரட்டி பேரூராட்சி செயல் அலுவலர் 22.7.2021 நாளிட்டு இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தமது அறிக்கையில், முறையீட்டு மனுதாரரின் சகோதரர்களுக்குள் சமாதானம் ஏற்பட்டு பாகப்பிரிவினை சரிசெய்யப்பட்டுள்ளதென்றும், எனவே மனுதாரர் அளித்த புகார் மனுவினை வாபஸ் பெற்றுக்கொள்ள 20.7.2021 நாளிட்ட விண்ணப்பம் அளித்துள்ளதாகவும், அவ்விண்ணப்பத்தினை உரிய நடவடிக்காக இம்முறைமன்ற நடுவத்திற்கு செயல் அலுவலர், அதிகரட்டி பேரூராட்சி அனுப்பிவைத்துள்ளார். மேலும், முறையீட்டு மனுதாரர் 23.7.2021 நாளிட்டு இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தமது சகோதரர்களிடையே பாகப்பிரிவினை செய்யாமல், தனது தாயார் திருமதி. தேவியம்மாள் பெயரில் உள்ள கதவு எண்கள் 9/44 மற்றும் 9/45 ஆகியவற்றில், கதவு எண்.9/44ஐ தமக்குத் தெரியாமல் முறைகேடாக தனது பெரிய அண்ணன் பெயருக்கு பெயர் மாற்றம் செய்துகொடுத்தும், புதிய குடிநீர் இணைப்பு வழங்கியுள்ளார்கள் என்றும், எனவே இந்த முறைகேடு தொடர்பாக அதிகரட்டி பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் பணியாளர்கள் மீது புகார் மனு அளித்திருந்ததாகவும், இப்பொழுது சகோதரர்களிடையே சமரசம் ஏற்பட்டுள்ளதாலும், முறைகேடாக பெயர் மாற்றம் செய்த வீட்டினையும் மற்ற வீடுகளையும் சகோதரர்கள் மூவர் பெயரில் முறைப்படி சொத்துவரி பெயர் மாற்றம் செய்து கொடுக்கப்பட்டதாலும், கதவு எண்கள் 9/91, 9/92 வீட்டிற்கு மேற்புறத்தில் உள்ள பொது இடத்தில் தனது அண்ணன் கட்டியிருக்கும் கட்டிடத்திற்கு புதிய வரிவிதிப்பு செய்துள்ளனர். இது சம்மந்தமாகவும் புகார் மனு அனுப்பியிருந்ததாகவும், தற்போது இதுசம்மந்தமாக சமரசம் ஏற்பட்டுள்ளதால், மேற்கண்ட இரண்டு புகார்களையும் வாபஸ் பெற்றுக்கொள்வதாகவும், மேலும் தமது முறையீட்டு மனு தொடர்பாக 3.8.2021 அன்று

உத்தேசிக்கப்பட்டுள்ள நேரடி விசாரணையை கைவிடுமாறும், மேலும் முறையீட்டு மனு எண்.215/2019ஐ முடித்து வைக்குமாறும் முறையீட்டு மனுதாரர் திரு. N. சந்திரசேகரன், கோடேரி அவர்கள் இம்முறைமன்ற நடுவத்திற்கு அளித்துள்ள தமது கடிதத்திலும் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. செயல் அலுவலர், அதிகரட்டி பேரூராட்சி அவர்களது அறிக்கை மற்றும் முறையீட்டு மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள கடிதம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. இம்முறையீட்டு மனு குறித்து அதிகரட்டி பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள 24.1.2020 நாளிட்ட அறிக்கையில், திரு. ஜம்புலிங்கம் என்பவர் தனது தாயாருக்குச் சொந்தமான பல குடியிருப்புகள் உள்ளதாகவும், 9/44 பாகப் பிரிவினைப்படி தனக்கு பாத்தியபட்டதாகவும், மேற்கண்ட குடியிருப்பினை தனது பெயருக்கு பெயர் மாற்றம் செய்யுமாறு நோட்டரி வழக்கறிஞரிடம் தடையில்லாச் சான்று பெற்று, தனது தாயார் தேவியம்மாள் என்பவரின் பெயரில் உள்ள 9/44 கொண்ட குடியிருப்பினை தனது பெயருக்கு பெயர் மாற்றம் செய்யக் கோரி விண்ணப்பித்ததன் அடிப்படையில், அதிகரட்டி செயல் அலுவலரின் செயல்முறை ஆணை ந.க.எண்.619/2015 நாள் 21.8.2015–ன்படி பெயர் மாற்றம் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பின்னர், முறையீட்டு மனுதாரரின் மற்றொரு அண்ணன் திரு. அசோக்குமார் தனது தாயார் பெயரில் உள்ள அனைத்து குடியிருப்புகளும் 9/44, 9/45, 9/91, 9/92 திரு. ஜம்புலிங்கம் மற்றும் திரு. என். சந்திரசேகரன் ஆகியோர் தங்களது பெயரில் குடியிருப்பினை பெயர் மாற்றம் செய்ய ஆட்சேபனை தெரிவித்ததன் அடிப்படையில், திரு. ஜம்புலிங்கம் என்பவரின் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்ட குடியிருப்பினை திருமதி. தேவியம்மாள் பெயருக்கே கொண்டுவரப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. முறையீட்டு மனுதாரர் 23.7.2021 நாளிட்டு இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தமது சகோதரர்களிடையே சமரசம் ஏற்பட்டு, முறைகேடாக பெயர் மாற்றம் செய்த வீட்டினையும் மற்ற வீடுகளையும் சகோதரர்கள் மூவரின் பெயரில் முறைப்படி சொத்து வரி பெயர் மாற்றம் செயல் அலுவலரால் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாகவும், இதுகுறித்து ஏற்கனவே இம்முறைமன்ற நடுவத்திற்கு தான் அளித்திருந்த புகார் மனுவினை வாபஸ் பெற்றுக்கொள்ள சம்மதம் தெரிவித்துள்ள போதிலும், அவரது அண்ணன் திரு. ஜம்புலிங்கம் செயல் அலுவலர், அதிகரட்டி பேரூராட்சிக்கு அளித்துள்ள 8.7.2015 நாளிட்ட விண்ணப்பத்தில், தனது தாயார் சில ஆண்டுகளுக்கு முன்னர் காலமாகிவிட்டார் என்று தெளிவாக குறிப்பிட்டுள்ள நிலையில், நோட்டரி வழக்கறிஞர் அளித்த தடையில்லாச் சான்று ஒன்றையே ஏற்று, திருமதி தேவியம்மாள் என்பவருக்கு மூன்று வாரிசு மகன்கள் இருப்பது தெரிந்தும் கதவு எண்.9/44ஐ திரு. ஜம்புலிங்கம் என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்து கொடுத்தது முறைகேடான செயல் என்றே இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. நோட்டரி வழக்கறிஞர் அளித்த தடையில்லாச் சான்று பெயர் மாற்றம் செய்வதற்கு போதிய சட்டபூர்வமான ஆவணமாக ஏற்க இயலாது. போதிய ஆதார ஆவணங்கள் எதனையும் ஆராயாமல், இதர சகோதரர்களது ஆட்சேபனை எதனையும் பெறாமல் பெயர் மாற்றம் செய்தது ஏதோ உள்நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட செயல்

என்றே தோன்றுகிறது. எனவே, இச்செயலுக்குக் காரணமான செயல் அலுவலர் மற்றும் இதர பணியாளர்கள் குறித்து அதிகரட்டி பேரூராட்சியின் ஆவணங்களை ஆய்வு செய்து, குற்றம் செய்துள்ளது உறுதியானால், சம்மந்தப்பட்டவர்கள் மீது உரிய விதிகளின்கீழ், துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள பேரூராட்சிகளின் ஆணையருக்கு பரிந்துரைக்கலாமென இம்முறைமன்ற நடுவம் முடிவுசெய்து, அவ்வாறே ஆணையிடுகிறது. இதுபோன்ற பெயர் மாற்றங்களில் முறைகேடாகவும் விதிமுறைகளை மீறி செயல்படும் செயல் அலுவலர்கள் மற்றும் அதனைக் கண்டிக்காமல் இருந்துவரும் உதவி இயக்குநர்கள் மீதும் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள பேரூராட்சிகளின் ஆணையாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

2021ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 23–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

ஒம்/–x x x x
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
திரு. N. சந்திரசேகரன்,
த/பெ நஞ்சா கவுடர், கோடேரி மற்றும் அஞ்சல்,
நீலகிரி மாவட்டம்–643 213.

பேரூராட்சிகளின் ஆணையாளர்,
பேரூராட்சிகளின் ஆணையரகம், நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை, எம்.ஆர்.சி நகர், சென்னை–28

இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையரகம், நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை, எம்.ஆர்.சி நகர், சென்னை–28 (உறையில் பெயருடன்)

செயல் அலுவலர், அதிகரட்டி பேரூராட்சி, நீலகிரி மாவட்டம்
நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.
இ.கோ/உதிரி

-/ ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது/–

29/11/21

செயலாளர்

29.11.21